மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Religious Thoughts in Streetplay Art

C. Parameshwaran

Research Scholar (Part Time), International Institute of Tamil Studies, Tharamani, Chennai, India

Manuscript ID : **MT127A0063**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 19.09.2022
Revised: 21.09.2022
Accepted: 23.09.2022
Published: 30.09.2022

Pages : 117-123

DOI: 10.5281/zenodo.7371936

ABSTRACT:

Street plays are in traditional for our culture it has been enacted to end of the street. It was used for the small wood in ancient to our previous generation people wearing the ornaments and enacted to the street. But current generation peoples do not accept the first play of the street but it has lot of artist and their thoughts so old peoples agreed to the street play. For draupadi has the best example of street play because of dharmapuri people having the draupadi festival disguised to the gods and enacted the street. Street play created to the awareness of our culture and religion.

KEYWORDS:

History, Tamil Literature, Dialects, Colloquial Languages

தெருக்கூத்துக் கலையில் சமயச்சிந்தனைகள்

சி. பரமேஸ்வரன்,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தெருக்களில் தெருமுனைச் சந்திப்புக்களில் ஆடப்படும் கூத்து என்றும் கூத்தாட்டக்களத்தை அடிப்படையாகக் கொண்டு தெருக்கூத்து என்று வழங்கும் போது கட்டையால் செய்த அலங்கார ஆபரணப் பொருட்களை அணிந்துகொண்டு ஆடும்போது. ஏன் அவற்றை முதன்மை கூத்து என்று வழங்கக்கூடாது எனும் இன்றைய தலைமுறையினர் கூறினாலும் முதிர்ச்சியும் கொண்ட கலைஞர்களின் கருத்தைக் கொண்டு தெருக்கூத்து என்னும் பெயரே பொருத்தமாகிறது தெருக்கூத்துக் கலையின் மூல காரணியான திரௌபதியம்மன் ஆலயங்கள் வழிபாடும் அதிகம் உள்ள வடதமிழகப் பகுதிகளில் அதிக அளவு திரௌபதியம்மன் வழிபாடுள்ள தருமபுரி மாவட்டத்தில் நடிக்கப் பெறும் கூத்தில் சிவபெருமான், திருமால் போன்ற பெருந்தெய்வ வழிபாடும் சைவ வைணவ கருத்துகள் தெருக்கூத்தான அர்சுனன், தபசு, கர்ணன் மோட்சம், திரௌபதி, துகில் போன்ற நாடகங்களில் சமயம் சார்ந்த கருத்துக்கள் எப்படி சித்தரிக்கப்படுகிறது என்பதை எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரையானது விளக்குகிறது.

கருச்சொற்கள்

தமிழ் இலக்கிய வரலாறு, நாடக நூல்கள், பேச்சு வழக்கு, வட்டார வழக்கு

முன்னுரை

கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் 6 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டின் வரலாறு அறிய முடியவில்லை அந்தக் கால எல்லையில் தமிழ் இனத்தவர் இல்லாமல் களப்பிரர் இனத்தவர் தமிழகத்தை ஆண்டார்கள் என்றும் அவர்கள் பண்பாட்டினை அழித்தார்கள் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். தமிழரின் மேன்மைக்குரிய இலக்கியங்கள் நன்றேனும் அந்த கால கட்டத்தில் தோன்றவில்லை என்பதை உணரும் போது அந்த காலத்தை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பாலை என்றேக் கூறத் தோன்றுகிறது. தமிழ் நாட்டினைப் பற்றி ஒன்றுமே அறிய முடியாத அந்த இருண்டு காலத்தின் முடிவில் சைவ சமயமும், வைணவ சமயமும் வளரத் தொடங்கின. தமிழிலக்கிய பக்தி இலக்கியத் துறையில் வளர்ச்சியடைந்து பெருமையைக் குரியதாயிற்று. ஆரிய கருத்துக்களை எளிமையாக எடுத்துரைக்கும் ஆற்றல்

கதைகளுக்கு உண்டு. சமய அறிஞர்களும் சமூகச் சீர்திருத்தச் சான்றோர்களும் தங்கள் கருத்துக்களைக் கதைகள் வாயிலாக எடுத்துரைத்து வெற்றியும் பெற்றனர். தமிழகத்தில் சைவமும் வைணவமும் கதைகள் வாயிலாக மக்களிடம் சமயம் சார்ந்த செய்திகள் சமய உணர்வுகளையும் தெருக்கூத்தின் பாடல்கள் வாயிலாக சிவபெருமான், திருமால், திரௌபதி போன்ற தெய்வங்கள் பற்றியும்; சமயம் குறித்த செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கூத்துகலை

கூத்துக்கலைகள் சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையிலும் இருப்பதற்கு தமிழ் இலக்கண இலக்கிய நூல்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அகத்தியம் போன்ற நூல்களில் குறிப்புகள் இருப்பதால் பழமையான கலைகளில் ஒன்று கூத்துக்கலை ஆகும்.

“கூத்து என்னும் சொல் முதலில் நடனத்தையும், பின்பு கதை தழுவி வரும் கூத்தாகிய நாடகத்தையும் குறித்தது இயற்றமிழைப் புலவரும் இசைத் தமிழைப் பாணரும் பேணி வளர்த்தார் போலவே, நடனத்தையம் நாடகத்தையும் கூத்தர் என்போர் பேணி வளர்த்தனர்;” நாடகக் கலை) ப-78

நடனம் ஆடும் மகளிர் விறலியர் எனப்பட்டனர் உள்ளக் குறிப்புப் புறத்தில் தோன்றும்படி திறம்பட நடிப்பவள் விறலி எனப்பட்டாள் கூத்திரா, கூத்தர் ஆகிய இவர்கள் கதைத் தழுவி வரும் கூத்துக்களை ஆடினர். அங்கனம் ஆடிய பொழுது ஆண் மகன் பொருநன் என்றும் பெயர் பெற்றான்.

“கூத்தர் என்றால் நாடகர் கூத்து என்றால் நாடகம் நடனம்”

(அபிதான சிந்தாமணி) ப-514

என்று கூத்து குறித்தும் கூத்தர் குறித்தும் பொருள் விளக்கம் தருகிறது.

தமிழ் தொன்றுதொட்டு இயல், இசை, நாடகம் என்னும் பெற்றிருந்தது. சிலப்பதிகார காலத்தில் வடமொழியாளர் கூட்டுறவு தமிழகத்தில் மிகுதியாக இருந்தது. அக்காலத்தில் நாடகம் என்னும் சொல், குறித்தது நாடகக் காப்பிய நன்னூல் என வரும் தொடரில் உள்ள ‘நாடகம்’ என்னும் சொல்லுக்குக் கதை தழுவி வரும் கூத்து என்று பொரும் எழுதியிருத்தல் கவனிக்கத்தக்கது. எனவே கூத்துக்கலை தமிழுக்கு பழமையான கலைகளுள் கூத்துக்கலையும் ஒன்று என குறிப்பிடப்பட்டுள்ளது.

தெருக்கூத்து

தமிழர்களின் பழைமையும் சிறப்பும் மிகுந்த நாட்டுப்புறக் கலைகளுள் இக்கலையும் ஒன்றாகும். இக்கலை தெருக்கூத்து, கட்டைக்கூத்து என்றும் இடத்திற்கு ஏற்றவாறு அழைக்கப்படுகிறது

'இந்நிகழ்ச்சி தெய்வ வழிபாட்டோடு தொடர்புடையது என்பதால் திரௌபதியம்மன், மாரியம்மன் போன்ற கோயில் திருவிழாக்களில் நடத்தப்படுகிறது. இக்கலை இரவு நேரத்தில் மட்டுமே நிகழ்தப்படுவதாகும்'. வீட்டில் நடக்கும் சுப மற்றும் தக்க நிகழ்ச்சிகளை ஒட்டியும் நிகழ்த்தபடுகிறது. இந்நிகழச்சி தெருக்களில் அதாவது தெருக் கூடும் முச்சந்திகளில் நடைபெறுவதால் தெருக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது. இரவு முழுவதும் விடிய விடிய நடத்தப்படுகிறது இராமாயணம், மகாபாரதம், பாஞ்சாலி சபதம் போன்ற புராணங்களைத் தொடர்ந்து 18 நாட்கள் நிகழ்ச்சியை நடத்துவர்.

சைவ சமயம்

சைவ சமயம் தமிழ் நாட்டின் பழமையான சமயங்களுள் ஒன்று. சமணமும் பௌத்தமும் சரிந்து, சைவ சமயம் தழைத்து வளருவதற்குத் தொண்டு புரிந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஆவர்.

'சிவனையே தென்னாடுடைய சிவன் என்று போற்றுவது மரபு' (தமிழ்இலக்கிய வரலாறு) ப-103

இச்சமய கடவுளான சிவபெருமானை பற்றி வழிபாட்டு பாடல்கள் தெருக்கூத்துக் கலைகளிலும் காணமுடிகிறது.

ஆர்ஜீனன் தபசுசில் சிவபெருமான்

நாடு, நகரத்தை சூதில் இழந்த பாண்டவர்கள் பின்பு காட்டில் வாழ்கின்றனர் துவைத வனத்திற்கு சென்று அங்கு ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு பாண்டவர்கள் வாழ்கின்றனர். அச்சமயம் தன் நாட்டை இழந்ததை மீண்டும் அதனை மீட்பதற்கும் துரியோதனன், பீஸ்மர், கர்ணன் இவர்களை போரில் வெற்றி பெறுவதற்கு பாசுபதம் வேண்டி அர்சுனன் சிவபெருமானை நோக்கி தவம் செய்து பாசுபதம் பெறுவது குறித்தும் சிவபெருமான் வழிபடுவது குறித்தும் அர்சுனன் தபசு நாடகத்தில் சில பாடல்கள்

'அரகரசிவசிவமகாதேவாயுந்தன்
அருள்விழிபாசிவ மகாதேவா அர

கருதவரியசற்பாலாசெழுங்
கருணைக்கடலேகற்கபாலா அர
சிவசிவசங்கராதிரிசூலாயுந்தன்
திருவருள் புரிந்திடும்திரிசூலா அர’ **(அர்ச்சுனன் தபசு நாடகம்)**; ப-14

இப்பாடலில் அர்சுனன் பரமேஸ்வரனை நினைத்து துதி பாடி கொண்டு தபசுக்கு செல்லுகின்ற காட்சியை குறிக்கிறது. இதனால் மக்கள் தங்களுக்கு ஒரு கஷ்டமான நிலையில் சைவக் கடவுலான சிவபெருமானை நோக்கி தவம் இருப்பதும் வழிபடுவது குறித்து தமிழறிஞர்கள் தமிழாய்வாளர்களும் ஆய்வு செய்து பல இடங்களில் கருத்துக்களை முன் வைத்து வருகின்றார்கள்.

“விடையா சூலப்படையா கங்கை
சடையா யென்னையாளா
உடையா சிறுதடியிடைய னிலம்பிடு
நடையாவஞ்சகனருள் அடியாள்வருவிய விடையா
அடிக்கடிசோதனை பண்ணாதே யெந்தனை
அகலவிடமனதி லெண்ணாதே
தடுக்குமாய்கைக்குள் சும்மாவெண்ணாதே நம்கும்
தமியேன்மனம் சுதைக்கவொண்ணாதே
அடுக்குமிவ்வேளையென்னை ஆதரித்தருள்தரும்
அகத்துக்களை நீக்கியருள் கண்ணல்சற்றேபாரும் விடை”

(அர்ச்சுனன் தபசு நாடகம்); ப-26

இப்பாடலில் தபசுக்கு செல்கையில் அர்சுனனுக்கு சிவ பெருமான் தரும் சோதனையை நினைத்து இனியும் சோதனை இல்லாமல் சிவ பெருமானை காண வேண்டும் என்று அர்சுனன் துதிகின்ற காட்சியை தெருக் கூத்தில் இறைவன் வேடமிட்டும் இறைவனை காண்பறற்காக பக்தன் அவன் தவ நெறியில் நிலைத்து நிற்பதையும் தெருக் கூத்துக் கலையும் கலைஞர்களும் மக்களுக்கு இன்றளவும் எடுத்துரைப்பதை நாடக கலைகளும் நாடக நூல்களும் தெருக் கூத்து குழுக்களும் சமயம் சார்ந்த கருத்துக்களை மக்களுக்கு கதையின் வழி செய்தியாக சொல்லப்பட்டு வருகிறது.

வைணவ சமயம்

கி.பி 700 தொடங்கி ஏறக்குறைய 900 வரை சைவ சமய எழுச்சிக்கு இணையாகத் தமிழ்நாட்டில் வைணவ பக்தி இயக்கத்தை மக்களிடையே நடத்திக் காட்டிய பெருமை பன்னிரு ஆழ்வார்களை சாரும்

“பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐய்தும்
சேர்ந்தானை மெய்மலர்தூய்க் கைதொழுதால்”

(தமிழ் இலக்கிய வரலாறு) ப-162

திருமால் வழிபாட்டைத் தமிழ் மொழியில் கிடைத்த முதல் முழு நூலாகிய தொல்காப்பியத்தால் உணரலாம். பரிபாடலும் திருமால் புகழைப் பறைசாற்றுகிறது. இத்திருமாலின் புகழைத் தெருக் கூத்துக் கலைகளில் இன்றும் திருமால் வழிபாடு மக்களிடையே இருப்பதைத் தமிழ் நூல்கள் எடுத்துரைக்கிறது.

கர்ண மோட்சம்

கர்ண மோட்சம் நாடகத்தில் அர்சுனன் கணையாள் அடிப்பட்ட கர்ணன் தான் பெற்ற தானத்தினால் அவன் உயிர் பிரியாமல் இருப்பதைக் கண்ட கிருஷ்ணர் வேதியர் உருவம் கொண்டு கர்ணனின் இளம் வயது முதல் தற்போது வரை அவன் செய்த தானங்களை தான் பெற்றுக் கொண்டு கர்ணனுக்கு பகவான் கிருஷ்ணர் மோட்சம் அளிப்பதை கூறுவதே கர்ண மோட்சம் நாடகம். இதில் வைணவக் கடவுளான கிருஷ்ணர் பற்றிய பாடல்களை காண்போம்

“கெருட வாகனர் வந்தார் குருஷேத்திரம் தேடி
கெருட வாகனர் வந்தார்
கெருட வாகனர் வந்தார் கின்னரர் புடைசூழ
வருணன் குடைபிடிக்க வாய்வு சாமரை போட
வானவராகிய கோன வரிந்திரர்
வீணைகள் பாடிட நாரதர் கூடியே கெரு
குந்திமா தேவி யீன்றமைந்தன் கர்ணனுக்கு
விந்தையாய் வீர சொர்க்கம் தந்திட வேணு மென்று
குந்தியின் ழடந்தனும் முந்தி பிறந்தவன்
விந்தை பதம் பெற சிந்தை மகிழ்ந்திட கெரு”

(கர்ண மோட்சம் நாடகம்) ப-72

பிராமணனாக கிருஷ்ணர் உருமாரி கர்ணனிடம் அவன் பெற்ற தானத்தை கையை நீட்டிதானம் வாங்கிக் கொண்டு கர்ணனன் சுண்டு விரலை தூக்கிய பிராமணன் தொங்க விடவும் விரலில் தீர்த்தம் பெருகியப் பின்பு கர்ணனுக்கு கிருஷ்ண பகவான் மோட்சம் தருவதற்கு கெருட வாகனம் ஏறி வருகின்ற காட்சியில் மனிதன் மற்றவர்களுக்கு உதவினால் அசன் செய்த உதவி அவனைக் காக்கும் என்று கதையின் வழி மக்களுக்கு

தானம் செய்தால் இறைவன் காப்பார் என்ற சமயக் கருத்தும் தெருக்கூத்தின் வழி மக்களுக்கு எடுத்து சொல்லப்பட்டு வருகிறது.

முடிவுரை

தெருக்கூத்து இன்றைய நாடக வடிவங்களில் முன்னோடி வடிவமாகும். தெருக் கூத்தின் பரிணாம வளர்ச்சியே இன்றைய நாடகம் ஆகும். பழங்கால மக்கள் வாழ்க்கையில் தெருக் கூத்து செல்வாக்குடன் இருந்திருக்கின்றது. இது இன்று ஊர்ப் புறங்களில் திரௌபதி அம்மன் திருவிழாச் சடங்குகளில் ஒரு சடங்காக இடம் பெறுகிறது. வேறு தெய்வக் கோயில்களில் திருவிழா நிகழ்ச்சியாகின்றது. இது ஊர் மக்கள் வாழ்க்கையோடு இணைந்துவிட்ட ஒரு முழுமையான கலை வடிவம். இக்கலைப் பெரும்பாலும் மகாபாரதம், இராமாயாணம் புராணம் கதைகளையே உள்ளடக்கி கூத்து நடிக்கப் பெறுகிறது. தெருக் கூத்தில் நடிக்கப் பெரும் அர்சுனன் தபசு கர்ண மோட்சம், திரௌபதி துகில் போன்ற நாடகங்களினால் சமயம் கூத்துக் கலையால் வளர்ந்ததும் சமயத்தால் கூத்துக் கலை வளர்ந்ததையும் இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

தொகுப்புரை

- நாடகத்தின் வழி சமயங்கள் வளர்வதையும் கலைகள் இன்று வரை நிலைப்பதற்கு சமயங்கள் முக்கிய காரணமாக விளங்குகிறது. தெருக் கூத்துக் கலைகளை ஆராய்வதன் மூலம் பலவித சமயச் சிந்தனைகளை ஆய்வுலகிற்குக் கொண்டு செல்ல முடியும்.
- இது போன்ற சிறு கட்டுரைகள் கூட கூத்துக் கலை ஆய்வுகளுக்கு தொடக்கப் புள்ளியாக அமையலாம்.
- ஆய்வில் பின் தங்கி காணப்படும் கலைகள் சார்ந்த தமிழ் இலக்கியத் துறைக்கு பயன்படலாம்.

துணைநூற்பட்டியல்

1. மா. இராச மாணிக்கம் - நாடகக்கலை. அழகு பதிப்பகம் - சென்னை-49
2. ஆ. சிங்கார வேலு முதலியார் - அபிதான சிந்தாமணி - மதுரை தமிழ்சங்கம் வெளியீடு
3. சூளை - முனிசாமி - அர்ச்சுனன் தபசு நாடகம் - இரத்தின நாயகர் சன்ஸ் சென்னை-79
4. சூளை முனிசாமி - கர்ண மோட்சம் நாடகம் - இரத்தின நாயகர் சன்ஸ் சென்னை-79
5. ஜெ. ஸ்ரீசந்திரன் - தமிழ் இலக்கிய வரலாறு ஸ்ரீசந்திரன் பதிப்பகம்-78
6. அடைக்கலசாமி - தமிழ் இலக்கிய வரலாறு ராசி பதிப்பகம் சென்னை

REFERENCES

1. Rasa manickam, M. Dramatic Art, Azhagu Padhippagam, Chennai – 49.
2. Mudhaliyar, Singaravelu, A. Abidhanachinthamani, Publication of Madurai Tamil Sangam
3. Arjunan, Munusamy, Soolai. Tapasu Drama, Rathinanaiyar sons, Chennai – 79.
4. Munusamy, Soolai. Karnamoksha, Rathinanaiyar sons, Chennai – 79.
5. Srichandiran, J. History of Tamil Literature, Srichandiran padhippagam – 78
6. Adaikalasamy. History of Tamil Literature padhippagam, Chennai.